**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**

**தீர்மானம் எண் :665, நாள் : 16.04.2018**

**––––––**

1) சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான அத்தாணி ரோடு உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Bio Mining) சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணிக்கு ரூ.81.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும் மேலும், மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும், உரிய கருத்துருக்கள் அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**

**தீர்மானம் எண் :666 , நாள் : 16.04.2018**

------

2) சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.9 அண்ணா நகர் பொது கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதிகள் இல்லாமல் கழிப்பிடம் பயன்படுத்த முடியாமல் உள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் அடிக்கடி புகார்கள் தெரிவித்து வருகிறார்கள். எனவே, அண்ணா நகர் பொது கழிப்பிடத்திற்கு புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்த உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத் தொகை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம், மேலும் 2018-2019 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 667, நாள் : 30.04.2018**

**------**

1) இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் மார்ச் 2018ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 668 , நாள் : 30.04.2018**

**––––––**

2) இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2018ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 669 , நாள் : 30.04.2018**

------

3) சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக் கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் வாகனம் எண்.TN 36 Z 1229 க்கு பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய 24.4.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு.

| வ எண் | நிறுவனத்தின் விபரம் | விலை விபரம் |
|---|---|---|
| 1 | ஜே.வீ.கே. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,சேலம் | 132725.00 |
| 2 | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் டேம் | 124950.00 |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலக குறிப்பு :-

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர்கள் லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் டேம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது அதனை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டு எண். 279/2018/எச்1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 670, நாள் : 30.04.2018**
**------**

4) சத்தியமங்கலம் நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2018-2019 ஆம் ஆண்டிற்கு சாலை வரி மற்றும் பசுமை வரி செலுத்தப்பட வேண்டும்.

| வரிசை எண் | வாகனம் எண் | சாலை வரி மற்றும் தொழிலாளர் வரி | பசுமை வரி மற்றும் சேவை வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | TN 36 Y 6881 | 4757 | 510 | 5267 |
| 2 | TN 36 X 0879 | 3618 | 510 | 4128 |
| 3 | TN 36Z 3643 | 3618 | 510 | 4128 |
| 4 | TN 36 AZ 8821 | 3618 | - | 3618 |
| 5 | TN 36 AQ 4510 | 7226 | - | 7226 |
| 6 | TN 36Z 1229 | 2586 | 510 | 3096 |
| | **மொத்தம்** | **25423** | **2040** | **27463** |

மேற்கண்ட விபரப்படி சாலை வரி மற்றும் தொழிலாளர் வரித் தொகை ரூ.25423/- ECS முறையில் செலுத்தவும், பசுமை வரி மற்றும் சேவை வரித் தொகை ரூ.2040/- ரொக்கமாக வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் செலுத்திடவும் செலவினம் ரூ.27463/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்

(கட்டு .எண். 409/2018/எச்1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 671 , நாள் : 30.04.2018**
**––––––**

5) சத்தியமங்கலம் நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN 36 Y 6881 எண் கொண்ட வாகனத்திற்கு காப்பீடு காலம் 31.5.2018 நள்ளிரவுடன் முடிவடைகின்றது. எனவே மீண்டும் 31.5.2018 நள்ளிரவு முதல் 30.5.2019 நள்ளிரவு முடிய ஓராண்டு காலத்திற்கு வாகனக் காப்பீடு புதுப்பித்துக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.12000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டு எண். 342/2018/எச்1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 672, நாள் : 30.04.2018**

------

6) சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் கழிவு நீர் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN 36 Z 3643 எண் கொண்ட வாகனத்திற்கு காப்பீடு காலம் 5.5.2018 நள்ளிரவுடன் முடிவடைகின்றது. எனவே மீண்டும் 5.5.2018 நள்ளிரவு முதல் 4.5.2019 நள்ளிரவு முடிய ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.19000/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டு எண்.343/2018/எச்1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 673 , நாள் : 30.04.2018**

**------**

7) சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி எண்.TN36Y0200 வாகனத்திற்கு சாலை வரி 31.3.2018 காலம் முடிவடைந்ததால் 2018-2019 ஆம் ஆண்டிற்கு சாலை வரி வட்டார போக்குவரத்து கழகத்திற்கு ரூ.11716/- (ரூபாய் பதினோராயிரத்து எழுநூற்றி பதினாறு மட்டும்) செலுத்தப்பட வேண்டும். ஆகவே இச்செலவினத்தை குடிநீர் நிதியில் செலவுகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை 2018-2019ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.447/2018/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 674 , நாள் : 30.04.2018**

**------**

8) சத்தியமங்கலம் நகராட்சி 2018-2019ஆம் ஆண்டு குடிநீர் நிதி திட்டத்தின் கீழ், இந்நகர்மன்றத்தில் தீர்மானத்தின்படி குடிநீர் நிதி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்தப்புள்ளி 18.04.2018 தேதி அன்று கோரியதில் வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளித் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட குள்ளங்கரடு, தனவாசி காலனி, ஆண்டவர் நகர் , புளியங்கோம்பை, பாசக்குட்டை உதயமரத்துமேடு ஆகிய பகுதியில் சின்டெக்ஸ் டேங்க அமைத்தல் | 200000 | M./s.Vino Constructions Contractor BhavaniSagar | ரூ.172843.00 | மதிப்பீடு தொகையினை விட 0.05 % குறைவு |
| | | | Thiru.C.K.Thiygarajan Contractor Sathyamangalam | ரூ.174892.00 | மதிப்பீடு தொகையினை விட 1.13% அதிகம் |

அலுவலக குறிப்பு-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவானஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor, BhavaniSagar அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டுஎண். 100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 675, நாள் : 30.04.2018**

------

9) சத்தியமங்கலம் நகராட்சி 2018-2019 ஆம் ஆண்டு வருவாய் நிதிதிட்டத்தின் கீழ், இந்நகர்மன்றத்தில் தீர்மானத்தின்படி குடிநீர் நிதி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்தப்புள்ளி 18.04.2018 தேதி அன்று கோரியதில் வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளித் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டிடங்களுக்கு வர்ணம் பூசம் பணி மேற்கொள்ளுதல். | 650000 | M./s.Vino Constructions Contractor BhavaniSagar | ரூ.574157.27 | மதிப்பீடு தொகையினை விட 0.03 % குறைவு |
| | | | Thiru. C.K.Thiygarajan Contractor Sathyamangalam | ரூ.585507.97 | மதிப்பீடு தொகையினை விட 1.94% அதிகம் |

அலுவலக குறிப்பு-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor, BhavaniSagar அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டுஎண். 100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 676 , நாள் : 30.04.2018**
**------**

10) சத்தியமங்கலம் நகராட்சி 2018-2019 ஆம் ஆண்டு வருவாய் நிதி திட்டத்தின் கீழ், இந்நகர்மன்ற தீர்மானத்தின்படி வருவாய் நிதி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்தப்புள்ளி 25.04.2018ஆம் தேதி அன்று கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளித் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கோவிந்தராஜபுரம் ஏற்கனவே உள்ள அங்கன்வாடி மையத்தில் கழிவறை வசதிகள் செய்தல். | 110000 | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | ரூ.96871.63 | மதிப்பீடு தொகையினைவிட 0.02% குறைவு |
| | | | Thiru.Manickam Contractor Sathyamangalam | ரூ.97624.56 | மதிப்பீடு தொகையினைவிட 0.76% அதிகம் |
| 2 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கொளத்துார் ஏற்கனவே உள்ள அங்கன்வாடி மையத்தில் கழிவறை வசதிகள் செய்தல். | 110000 | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | ரூ.96871.63 | மதிப்பீடு தொகையினைவிட 0.02 % குறைவு |
| | | | Thiru.Manickam Contractor Sathyamangalam | ரூ.97761.48 | மதிப்பீடு தொகையினைவிட 0.91% அதிகம் |

அலுவலககுறிப்பு-
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.Dharmaraj, Contractor, Sathyamangalam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டுஎண். 100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 677 , நாள் : 30.04.2018**

------

11) சத்தியமங்கலம் நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.9427/2018இன் படி திரு இலட்சுமணன் என்பவருக்கும் அரசு முதன்மை செயலாளர், சுற்றுசூழல் மற்றும் வனத் துறை, சென்னை மற்றும் ஐந்து நபர்கள், ஆணையாளர் சத்தியமங்கலம் நகராட்சி ஆகியோரின் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு 20.04.2018 அன்று மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நடைபெற்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஆஜாரான திரு.ஆனந்த, அரசு வழக்குறைஞர், உயர் நீதிமன்றம், சென்னை-600104 அவர்களின் கோரியதின்படி வழக்கு கட்டணமாக ரூ.15000.00 வழங்க தெரிவித்துள்ளார்கள். எனவே, இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.4444/2011/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஓம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 678 , நாள் : 30.04.2018**

------

12) சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் 100% குடிநீர் இணைப்புகள் வழங்குமாறு தெரிவித்துள்ளார்கள். எனவே, அதனை செயல்படுத்தும் பொருட்டு பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளுக்காக பகிர்மான குழாய்கள் அமைத்து குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளதால்,விடுபட்ட பகுதிகளுக்கு பகிர்மான குழாய்கள் அமைக்க உத்தேச செலவின தொகை ரூ.6.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத்தை 2018-2019 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 679 , நாள் : 30.04.2018**

------

13) சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட பேருந்து நிலையம்,அம்மா உணவகம்,நகராட்சி அலுவலகம் மற்றும் குப்பை கிடங்கு ஆகிய இடங்களில் தீ அணைக்கும் கருவி பொருத்தப்பட்டு (27 எண்ணிக்கைகள்) ஒரு ஆண்டு ஆகிவிட்டதால் Refilling பணிகள் மற்றும் புதிதாக 5 எண்ணிக்கை சிலிண்டர் வாங்கும் பொருட்டு உத்தேச செலவின தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத்தை 2018-2019 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018—ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30—ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 680 , நாள் : 30.04.2018**

**------**

14) இந்நகராட்சியில் பூங்கா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ராஜீவ் நகர் பூங்கா பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.திருப்பூர் மண்டல செயற்பொறியாளர் அவர்களின் ஆய்வில் பூங்காவிற்கு தனியாக கழிப்பிட கட்டிடம் கட்டுமாறு தெரிவிக்கப்பட்டது . எனவே, புதிதாக கழிப்பிடம் கட்ட உத்தேச செலவின தொகை ரூ. 3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்டுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினத்தை 2018-2019 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 681 , நாள் : 30.04.2018**

------

15) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு 27 வார்டுகளில் 101 ஆழ்குழாய் கிணறு மின் விசை பம்புகள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடிநீர் மற்றும் ஆழ்குழாய் மின் மோட்டார்கள் வறட்சியின் காரணமாக அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய அவ்வப்போது தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யவும் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றை ஆழப்படுத்திடவும் புதிய மோட்டார் பொருத்தவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யவும் மார்ச் வரை உள்ள காலத்திற்கு பராமரிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 682, நாள் : 30.04.2018**

------

16) சத்தியமங்கலம் நகராட்சி தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள்மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றிய அறிவிக்கை மாலை முரசு நாளிதழில் 10.4.2018ஆம் தேதி விளம்பரம் செய்யப்பட்ட வகையில் ரூ.31500/-ஐ வழங்க கேட்டு கோவை மாலை முரசு என்ற நிறுவனத்திடமிருந்து விளம்பர பில் 16.4.2018-ஆம் தேதியன்று வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை கோவை மாலை முரசு நிறுவனத்திற்கு வழங்குவது குறித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.338/2018/அ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 683 , நாள் : 30.04.2018**

**------**

17) சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.12 நகராட்சி ஆரம்ப பாடசாலை வடக்கு வீதி பகுதியின் சார் பதிவாளர் அலுவலகம் கிழபுறம் நகராட்சி சாலையோரப் பகுதியில் நகராட்சியில் வரையறுக்கப்படும் காலியிடத்தில் 6’x8’ அளவு கொண்ட ஆவின்பால் பெட்டி வைத்து நடத்தும் உரிமம் புதிய இனமாக 25.4.2018ஆம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக திருமதி எஸ்.வி.உமாதேவி க/பெ சி.செல்லமுத்து என்பவர் மாத வாடகையாக ரூ.2500/-க்கு கேட்டுள்ளார். மேற்கண்ட மாத வாடகையினை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட உரிம இனம் அரசாணை எண். 92-இன்படி ஒப்படைக்கும் தேதி முதல் 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்து கொள்ளும் உரிமத்திற்கு 25.4.2018-ஆம் தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக திருமதி எஸ்.வி.உமாதேவி க/பெ சி.செல்லமுத்து என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.2500/-க்கு கோரியுள்ளார். எனவே மேற்கண்ட மாத வாடகையை உறுதி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.3800/2016/அ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 684 , நாள் : 30.04.2018**
**––––––**

18) சத்தியமங்கலம் நகராட்சி பகுதி வார்டு எண்.9,10 அண்ணா நகர் முதல் பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதி (ஜான்டி பிரிட்டோ மகளிர் மேல்நிலைப் பள்ளி வரையில்) பகுதியில் நகராட்சியால் வரையறுக்கப்படும் 5'x10' அளவில் உள்ள காலியிடத்தில் கோழி இறைச்சி விற்பனை செய்யும் உரிமத்திற்கு புதியதாக பொது ஏல இனமாக 1.4.2018 முதல் மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலமாக 16.4.2018ஆம் தேதி கோரப்பட்டது. இதில் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. பொது ஒப்பந்தப்புள்ளியில் திரு ஜி.கிரிகோரி என்பவர் ஆண்டு வாடகையாக ரூ.25,000/- கோரியுள்ளார். இதனை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
மேற்கண்ட உரிமம் நகராட்சியின் கடைசி பகுதியில் புதிய இனமாக உரிமம் கோரப்பட்டது. இதில் திரு ஜி.கிரிகோரி என்பவர் ஆண்டு வாடகையாக ரூ.25,000/-க்கு கோரப்பட்டுள்ளதை பொது ஏல நிபந்தனை மற்றும் அரசாணை எண். 92-ன்படி மூன்றாண்டு காலத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.3800/2016/அ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 685 , நாள் : 30.04.2018**

------

19) தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை ஆணை எண்.11 நாள் 12.1.1999-ல், 1992ஆம் ஆண்டு தொழில்வரி விதித்தல் மற்றும் வசூல் சட்டத் திருத்தத்தின்படி ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒருமுறை மன்றத்தால் தொழில் வரியினை திருத்தியமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 1.10.2018-ல் ஐந்தாண்டு முடிவுறும் நிலையில் உள்ளதால் மேற்கண்ட ஆணையில் அறிவுறுத்தியுள்ளவாறு 25% குறையாமலும் 35% மிகாமலும் 1.10.2018 முதல் தொழில்வரி விகிதத்தை மாற்றியமைக்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

ஏற்கனவே உள்ள தொழில் வரி விபரம்.

| வ.எண். | அரையாண்டு வருமானம் (அனைத்துப் படிகள் உட்பட) | அரையாண்டு வரி |
|---|---|---|
| 1. | ரூ.21,000 வரை | --- |
| 2. | ரூ.21,001 முதல் ரூ.30,000 வரை | ரூ.127/- |
| 3. | ரூ.30,001 முதல் ரூ.45,000 வரை | ரூ.317/- |
| 4. | ரூ.45,001 முதல் ரூ.60,000 வரை | ரூ.634/- |
| 5. | ரூ.60,001 முதல் ரூ.75,000 வரை | ரூ.950/- |
| 6. | ரூ.75,001 முதல் | ரூ.1268/- |

அலுவலகக் குறிப்பு:

அரசு ஆணை எண்.11-ன்படி தற்சமயம் உள்ள அரையாண்டு தொழில் வரியில் 1.10.2018 முதல் குறைந்தபட்சம் 25% குறையாமலும் அதிகபட்சம் 35% மிகாமலும் வரி உயர்த்தல் வேண்டும். எனவே தொழில் வரி அதிகபட்சமாக உயர்த்துவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(கட்டு எண்.350/2018/அ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 686 , நாள் : 30.04.2018**

**------**

20) சத்தியமங்கலம் நகராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் ரூ.135.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வணிக வளாக கட்டிடம் கட்ட இந்நகராட்சி அலுவலக செயல்முறை கடிதத்தில் ஒப்பந்தார் திரு. சி.பி.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணியை ஒரு ஆண்டிற்குள் முடிக்க தெரிவிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் முதலில் பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி அஸ்திவாரம் தோண்டி பணி மேற்கொள்ளும் பொழுது அஸ்திவாரம் உறுதியாக இல்லாமல் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

எனவே, இது தொடர்பாக உரிய அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு மண்டல செயற்பொறியாளரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டு கோவை அரசு தொழில்நுட்ப கல்லூரியில் மறு வடிவமைப்பு பெற்று தருமாறு கேட்டுக் கொண்டார். அதன் அடிப்படையில் 18.04.2016 தேதியில் கோவை அரசு தொழில்நுட்ப கல்லூரியில் மறு வடிவமைப்பு பெறப்பட்டது. அதன் பிறகு பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் பருவமழை காரணமாகவும் கட்டுமான பொருட்கள் விலையேற்றம், பணம் மதிப்பு, மதிப்பு கூட்டு வரி சீராய்வால் ஒப்பந்ததாரருக்கு பணியை குறித்த காலத்தில் செய்து முடிக்க இயலவில்லை எனவும். எனவே, ஒப்பந்தாரர் கடிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி இந்நகராட்சின் அலுவலக செயல்முறை கடிதத்தில் ஒப்பந்ததாரருக்கு 15.10.2017 வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. இருப்பினும் ஒப்பந்ததாரர் குறித்த காலத்தில் பணிகள் முடிக்கவில்லை. தற்பொழுது ஒப்பந்ததாரர் பணியை நல்ல முறையில் செய்து முடித்து ஒப்படைப்பு செய்துள்ளார்.

எனவே, அஸ்திவாரம் வடிவமைப்பு பெற ஏற்பட்ட காலதாமதம் மற்றும் கட்டுமான பொருட்களின் விலையேற்றம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு ஒப்பந்ததாரர் தன்மீது எவ்வித நடவடிக்கைகள் எடுக்காமலும், தண்டம் விதிக்கமால் விலக்கு அளிக்குமாறு கடிதம் வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.3502/2014/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 687 , நாள் : 30.04.2018**
**------**

21) சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர், நகர்மன்ற தலைவர், நகராட்சி பொறியாளர், கணிணி வசூல் மையம் மற்றும் உதவி திட்ட அமைப்பாளர் ஆகிய அறைகளில் உள்ள ஏர் கண்டிஸ்சனர்கள் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. இதனை சரிசெய்யும் பொருட்டு உத்தேச செலவின தொகை ரூ.20,000/-க்கு நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினத்தை 2018-2019 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே.எம்.சுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.